செ.வெ.எண்:183 நாள்:17.03.2018

திருநெல்வேலி மாவட்டம் கடையநல்லூர் ஊராட்சி ஒன்றியம் கள்ளம்புள்ளி மற்றும் பொய்கையில் கால்நடை மருத்துவ கிளை நிலையத்தினை மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி.வி.எம்.ராஜலெட்சுமி அவர்கள் திறந்து வைத்தார்.

---

திருநெல்வேலி மாவட்டம் கடையநல்லூர் ஊராட்சி ஒன்றியம் கள்ளம்புள்ளி மற்றும் பொய்கை கால்நடை மருத்துவ கிளை நிலையம் திறப்பு விழா மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி இ.ஆப,அவர்கள் தலைமையில் இன்று (17.03.2018) நடைபெற்றது. இவ்விழாவில் மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி.வி.எம்.ராஜலெட்சுமி அவர்கள் கலந்து கொண்டு கால்நடை மருத்துவ கிளை நிலையங்களை திறந்து வைத்தார்.

இவ்விழாவில் மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் அவர்கள் பேசியதாவது:-

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தமிழகத்தில் 100 இடங்களில் கால்நடை மருத்துவ கிளை நிலையம் அமைக்கப்படும் என அறிவித்தார்கள். அதன் அடிபடையில் திருநெல்வேலி மாவட்டத்தில் கடையநல்லூர் ஒன்றியத்தில் பொய்கை ஊராட்சியில் பொய்கை மற்றும் கள்ளம்புளி பகுதியில் கால்நடை மருத்துவ கிளை நிலையங்கள் இன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் கள்ளம்புளி பகுதியில் உள்ள கரடிகுளம் ,கோவிலானுர்,சித்தம்பிநாடானுர்,சுப்பிரமணியபுரம் ஆகிய கிரமங்கள், பொய்கை பகுதியில் கீழ்பொய்கை,திரிபுரசுந்தரபுரம் ஆகிய கிராமங்களை சேர்ந்த விவசாயிகள் மற்றும் கால்நடை வளர்போர் பயன் பெறுவார்கள். கள்ளம்புளி பகுதியில் சுமார் 7150 கால்நடைகளும் ,பொய்கை பகுதியில் சுமார் 7000 கால்நடைகளும் பயன்பெறும் இதுவரை நான்கு ஐந்து கீ மிட்டர் தூரம் வரை சென்று கால்நடைகளுக்கு மருத்துவம் செய்து சிரமபட்டு இருப்பிர்கள் இனி இங்கு அருகிலேயே வைத்தியம் செய்து கொள்ளலாம். இப்பகுதி மக்களுக்கு தேவையான அனைத்து உதவிகளும் விரைந்து நிரைவேற்றி தரப்படும் என பேசினார்.

இவ்விழாவில் தென்காசி வருவாய் கோட்டாச்சியர் திரு.ராஜேந்திரன், டான்பெட் துணை தலைவர் கண்ணன்(எ)ராஜீ, ஆவின் தலைவர் திரு.ரமேஷ், நெசவாளர் சங்க தலைவர் திரு. ஆறுமுகம்,கால்நடை இணை இயக்குனர் திரு.ராஜேந்திரன்,துணை இயக்குனர் திரு.அருணாச்சலக்கனி முதன்மை மருத்துவர்கள் திரு.முருகையா,திரு.அசன்இப்ராகிம், முக்கிய பிரமுகர்கள் திரு.வேல் முருகன்,திரு.கிருஷ்ணமுரளி.திரு.கிட்டுராஜா,திரு.வசந்த முத்துபாண்டியன்,திரு.சுசிகரன்,திரு.ஆணை குட்டியப்பன்,கால்நடை மருத்துவர் திரு.செல்வ குத்தாலிங்கம் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,திருநெல்வேலி